“இனி ஒருபோதும் சொல்ல முடியாத தனிக் கதை”

சுகுமாரன்

அனைவருக்கும் வணக்கம். அருந்ததி ராயின் சின்ன விஷயங்களின் கடவுள் நாவலை வெளியிட்டுப் பேசும் இந்த வாய்ப்பு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. என்னுடைய மகிழ்ச்சிக்கு ஒரு பெரிய காரணமும் சில சின்னக் காரணங்களும் இருக்கின்றன. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கிடையில் நான் வாசித்து மகிழ்ந்த, என்னைப் பரவசப்படுத்திய மிகச் சில ஆங்கிலப் படைப்புகளில் ஒன்று இந்த நாவல். நான் சிந்திக்கும், கனவு காணும் என்னுடைய மொழியில் இனி இந்த நாவலை வாசிக்கவும் இதைப் பற்றி என்னுடைய மொழியிலேயே கலந்துரையாடவும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது என்பது பெரிய காரணம்.



சின்னக் காரணங்கள் நிறைய இருக்கின்றன. இந்தக் காரணங்களுக்காகத்தான் அதை விரும்பினேனா எனக் கேட்டால் இந்தக் காரணங்களுக்காகவும்தான் என்று தான் சொல்ல முடியும். விருப்பம் தான் முதல். அதை நியாயப்படுத்துவதற்கான காரணங்களை நாம் பின்னர் கற்பித்துக்கொள்கிறோம். இந்தக் கற்பிதங்கள் கலையும்போது அந்தக் காரணங்களும் வலுவிழந்துவிடுகின்றன. அந்த விருப்பம் இல்லாமல் போகிறது. சின்ன விஷயங்களின் கடவுள் நாவலைப் பொறுத்தவரை நான் கற்பித்துக்கொண்ட காரணங்கள் இன்னும் சிதறிப்போகாமலிருக்கின்றன. நாவல் இன்றும் என் விருப்பத்துக்குரியதாகவே இருக்கிறது.

இந்த ஆங்கில நாவல் 1997ஆம் ஆண்டு வெளியானது. வெளியீட்டுக்கு முன்பே எழுத்தாளருக்கு மிக அதிகமான முன்பணம் கொடுக்கப்பட்டது. புக்கர் பரிசு பெற்றது. இவையெல்லாம் பத்திரிகைகளில் பரபரப்பாகப் பேசப்பட்டன. அருந்ததி ராய் என்னும் பெயர் மிகவும் பிரபலமடைந்தது. ஆனால் அந்தப் பெயரைப் பத்திரிகையாளனாக அதற்கு முன்பே கவனத்தில் வைத்திருந்தேன். இரண்டு விஷயங்களுக்காக.

முதலாவது ஒரு திரைப்பட விமர்சனத்துடன் சம்பந்தப்பட்டது. 1994இல் வெளிவந்த படம். பூலன் தேவியின் வாழ்க்கைச் சம்பவங்களை மையமாக வைத்து சேகர் கபூர் இயக்கிய பாண்டிட் க்வீன் படத்துக்கு அருந்ததி ராய் எழுதிய விமர்சனம். சேகர் கபூரின் படத்தை ‘மாபெரும் இந்திய வன்புணர்ச்சித் தந்திரம்’ என்று அருந்ததி விமர்சித்திருந்தார். படத்தில் இடம்பெறும் மிக நீளமான கூட்ட வன்புணர்வுக் காட்சியை விமர்சித்திருந்தார். படத்தில் கிட்டத்தட்ட பத்து நிமிடங்களுக்கு மேல் அந்தக் காட்சி இடம்பெறுகிறது. அது போதாது என்று இயக்குநருக்குத் தோன்றியிருக்க வேண்டும். வன் கொடுமைக்கு ஆளான அந்தப் பெண் தன்னை மீட்டுக்கொண்டு எழுந்து நூறு அடி தூரத்திலிருக்கும் கிணற்றை நோக்கி நிர்வாணமாக நடந்துபோவதாகக் காட்சியை நீட்டியிருந்தார். வன்புணர்ச்சிக் காட்சியே கொடூரமானது. சொரணையுள்ள பார்வையாளனின் மனத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடியது. அதற்குப் பிறகும் அந்தப் பெண்ணை நிர்வாணக்கோலத்தில் நடக்கவிடுவது அதிர்ச்சியை அழுத்தமாக்குவதற்குப் பதில் பெண் உடலைக் கேளிக்கைப் பொருளாக்கும் தந்திரம் என்பதுதான் அருந்ததி எழுதிய விமர்சனத்தின் அடிப்படை.

இந்த விமர்சனத்துக்கு இயக்குநர் சேகர் கபூர் ஒரு பேட்டியில் பதில் அளித்திருந்தார். அப்போது வெளி வந்துகொண்டிருந்த சண்டே அப்சர்வர் இதழில் அந்தப் பேட்டி வெளியானது. அதில் தன்னிலை விளக்கமாக அவர் சொல்லியிருந்தது இப்போதும் ஓரளவு ஞாபகத்திலிருக்கிறது. ‘பூலன்தேவியின் கதையைப் படமாக எடுக்கும்போது என் முன்னால் இரண்டு நிலைப்பாடுகள் இருந்தன. ஒன்று கலையைச் சார்ந்து நிற்பது. இரண்டாவது உண்மையைச் சார்ந்து நிற்பது. நான் உண்மையைச் சார்ந்து இந்தப் படத்தை எடுத்தேன். ஏனென்றால் உண்மை தூய்மையானது’ என்று சொல்லியிருந்தார். பூலன் தேவியின் வாழ்க்கை கற்பனையானதல்ல; உண்மையானது. பாண்டிட் க்வீன் சினிமா உண்மையல்ல; உருவாக்கப்பட்டது. அதில் இடம்பெற்ற பாலுறவு வன்முறைக் காட்சி உண்மையானதல்ல; உருவாக்கப்பட்டது. பூலன்தேவியின் வாழ்வில் நடைபெற்ற அந்த வன்முறையை மீண்டும் ஒரு பெண்மீது, மனுஷஜீவி மீது நிகழ்த்திக்காட்டுவது உண்மையின் பேரால் நடத்தப்பட்ட வன்முறையல்லவா என்பதுதான் அருந்ததி முன்வைத்த விமர்சனத்தின் மையம். பூலன்தேவியை வன்புணர்ச்சிக்கு ஆளாக்கியவர்களின் நோக்கம் அதிகாரத்தை நிறுவுவது என்றால் பூலன்தேவியாக நடித்த பெண்ணை அதே அளவு கொடுமைக்கு இயக்குநர் தள்ளிவிட்டது வியாபாரத் தந்திரமல்லவா? உண்மையின் பேரால் நிகழ்த்தப்பட்ட தந்திரமல்லவா? அப்படி உண்மை என்பது முழுமுற்றானதா? எல்லாருக்கும் பொருந்தக் கூடிய உண்மை என்று உண்டா? அது சார்புத்தன்மை கொண்டதல்லவா? இவை அருந்ததியின் விமர்சனம் முன்னிறுத்திய கேள்விகள். இதைத் தொடர்ந்து ஊடகங்களில் நடந்த விவாதத்தில் படத்தில் பூலன் தேவியாக நடித்த சீமா பிஸ்வாஸ் பதிலைச் சொன்னார். ‘அந்தக் குறிப்பிட்ட காட்சியில் நடித்தது நானல்ல. வேறு ஒரு நடிகை’. அந்தப் பதில் அருந்ததி ராயின் விமர்சனத்தை மழுங்கச் செய்வதற்குப் பதிலாக மேலும் கூர்மையாக்கியதாகத் தோன்றியது. சீமா பிஸ்வாசுக்குப் பதிலாக நடித்தவரும் பெண்தான்; மனித ஜென்மம்தான். உண்மையின் பேரால் அல்லது கலை யின் பேரால் அவரும் கொடுமைப் படுத்தப்பட்டிருந்தது என்பதை எப்படி நியாயப்படுத்துவது எனக் கேள்வியெழுந்தது.

திரைப்படம் தொடர்பான விவாதங்கள் கலைந்துபோன பிறகும் இந்த விமர்சனம் என் ஞாபகத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. படைப்புச் செயல்மீதான தார்மீகக் கேள்வியை எழுப்பியது. படைப்பில், கலையில் உண்மையின் பங்கு என்ன? எந்த அளவுக்கு உண்மையைக் கலை வெளிப்படுத்த முடியும்? போன்ற இதுவரைக்கும் பதில்கள் கிடைக்காத அல்லது ஒருபோதும் பதில்கள் காண முடியாத கேள்விகளை மனத்தில் நிரந்தரமாக்கியிருக்கிறது. இந்த நிரந்தரப்படுத்தல்தான் அருந்ததி ராய் என்ற பெயரைத் தொடர்ந்து கவனிக்கவைத்தது.

1994ஆம் ஆண்டு கேரள உயர் நீதிமன்றம் நீண்ட நாட்களாக நடந்துவந்த ஒரு வழக்கில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது. மலையாள ஆண்டு 1092இல் உருவாக்கப்பட்ட திருவிதாங்கூர் கிறிஸ்தவச் சட்டத்தின் படி சிரியன் கிறிஸ்தவப் பெண்களுக்கு, நஸ்ராணிப் பெண்களுக்கு, பரம்பரைச் சொத்தில் உரிமை கிடையாது. இதை எதிர்த்துக் கோட்டயம் மாவட்டம் அய் மனத்தைச் சேர்ந்த மேரி ராய் வழக்கு தொடர்ந்திருந்தார். மாவட்ட நீதிமன்றத்தில் தள்ளுபடிசெய்யப்பட்ட அந்த வழக்கு உயர்நீதி மன்றத்துக்கு வந்து நெடுங்காலம் கிடப்பில் கிடந்து 1994 ஆண்டு தீர்ப்புக்கு வந்தது. பரம்பரைச் சொத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இது பற்றிய செய்திகளில், வழக்கில் வெற்றியடைந்த மேரி ராயின் பெயருடன் சேர்த்துக் குறிப்பிடப்பட்ட பெயர் அருந்ததி ராய். அருந்ததி ராய் என்ற பெயர் என் கவனத்தில் பதிந்த இரண்டாம் சந்தர்ப்பம் இது.

அருந்ததி ராய் என்ற ஆளுமையின் சாரத்தை இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலிருந்து ஊகிக்கலாம் என்று இப்போது தோன்றுகிறது. ஒன்று - மனிதர்களின் தார்மீகப் பொறுப்பைப் பற்றி அக்கறை காட்டுவது. மனிதர்களிடையே சமத்துவத்துக்காகக் கவலைப்படுவது. மற்றொன்று இந்த நாவலிலும் இதற்குப் பிறகு அவர் எழுதியிருக்கும் ஏராளமான கட்டுரைகளிலும் இந்த இயல்பைப் பார்க்கலாம். சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்திய வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தகுந்த கூறு செயல்படுகிறது எனத் தோன்றுகிறது- நிறுவனமயமாக்கப்படும் சமத்துவமின்மை.

அதைப் பற்றிய சிரத்தையைத் தூண்டுவதைத்தான் இந்த நாவலிலும் பிற எழுத்துக்களிலும் அருந்ததி ராய் செய்கிறார் என்று நம்புகிறேன்.

முன்பே சொன்ன சந்தர்ப்பங்கள் மூலம் ஏற்கனவே தெரிந்த ஒருவர் எழுதிய நாவல் என்பதுதான் தி காட் ஆஃப் ஸ்மால் திங்க்ஸை வாங்கத் தேர்ந்தெடுத்ததன் முதல் காரணம். பின்னர் விருப்பத்திற்கு உகந்த படைப்பாக அது மாறியதற்கும் இவை காரணமாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். மலையாள இலக்கியத்தை வாசிப்பதிலும் ஆர்வமுள்ளவன் நான்.

முட்டத்துவர்க்கி முதல் சக்கரியா வரையிலான எழுத்தாளர்களின் படைப்புகள் வழியாக நஸ்ராணி ஜீவிதத்தின் சாயலைக் கொஞ்சமாவது பார்த்திருப்பவன். அச்சாயன்மாரையும் அச்சாம்மமாரையும் அடையாளம் தெரிந்திருப்பவன். இந்த நாவலின் பக்கங்களுக்கு இடையில் ஓடும் மீனச்சில் ஆற்றில் நாவலை வாசிப்பதற்கு முன்பே கால்நனைத்தவன். இந்த உரிமை பாராட்டல்களும்கூட நாவலை விரும்பச் செய்திருக்கலாம். முதலில் சொன்னதுபோல விருப்பம்தான் முதல்நிலை. அதற்கான காரணங்கள் இரண்டாம் நிலை. இந்த நாவலை தி காட் ஆஃப் ஸ்மால் திங்க்ஸ் என்ற பெயரிலும் குஞ்வ் கார்யங்களுடெ ஒடேதம்புரான் என்ற பெயரிலும் சின்ன விஷயங்களின் கடவுள் என்ற பெயரிலும் வாசித்த பின்னர் விருப்பம்தான் மேலோங்கி நிற்கிறது. அது ஒரு விஷயத்தை நிரூபிக்கவும் செய்கிறது என்று எண்ணுகிறேன்.

நாவல் என்பது கதை சொல்லும் சாதனமல்ல; அதில் கதையிருந்தாலும். அது ஒரு பார்வை. நாம் என்னவாக இருக்கிறோம்; எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பவற்றை முன்வைக்கும் ஓர் அணுகு முறை. அதனாலேயே ஒரு நாவலின் கதையைச் சொல்லிவிடுவது சுலபம். அந்தப் படைப்பு நமக்கு என்ன கொடுத்திருக்கிறது என்று விளக்குவது கடினம். இந்நாவலின் கதை எளிமையானது. அதை நீங்கள் இணையத்தில் வாசிக்கலாம். அல்லது இந்த நாவலின் முதல் அத்தியாயத்தை வாசிக்கலாம். நாவலின் முக்கிய நிகழ்வுகள் பற்றிய ஏகதேச உருவம் ‘பாரடைஸ் ஊறுகாய்கள் & பதனங்கள்’ என்ற முதல் அத்தியாயம். ஆனால் கதையை மீறி இந்தப் படைப்பு என்ன கொடுக்கிறது என்பதுதான் முக்கியமாகப்படுகிறது. அதுதான் நாவலைப் பற்றிய பாராட்டுகளுக்கும் விமர்சனங்களுக்கும் காரணமாக இருந்திருக்கிறது.

சின்ன விஷயங்களின் கடவுள் நாவலை இந்திய மொழிகளின் நாவல் மரபில் வைத்து யோசிப்பது பொருத்தமானதல்ல என்று நினைக்கிறேன். இந்திய வாழ்க்கை பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நாவல் இது. காந்தபுரா என்ற ராஜாராவின் நாவல் முதல் அரவிந்த் அடிகாவின் வெள்ளைப் புலி வரையான மரபின் ஒரு கண்ணி இந்த நாவல். இதற்கான வாசகர்கள் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். ஆங்கில மொழிபெயர்ப்புகள் மூலம் இந்திய இலக்கியத்தை அணுகும் இந்தியர் அல்லாத வாசகர்கள். இந்திய மொழிகளில் வாசிப்புப் பழக்கம் இல்லாத இந்திய வாசகர்கள். இவர்களில் வெளிநாட்டு வாசகர் களை முன்னால் கண்டுகொண்டே இந்த மரபைச் சேர்ந்த நாவல்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மிகச் சில நாவல்களே இலக்கிய வாசகன் என்ற நிலையில் என்னைக் கவர்ந்தவை. பெரும்பான்மையானவை தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் வெளியாகும் வெகுஜன எழுத்துக்களைவிடவும் தரம் குன்றி யவை. அவற்றைவிடச் சிறந்த நாவல் கள், தீவிரமான கலைத்தன்மை கொண்ட படைப்புகள் மாநில மொழிகளில் எழுதப்படுகின்றன.

ஆங்கிலத்தில் எழுதப்படும் இந்திய எழுத்து மரபில் உடைப்பை ஏற்படுத்திய முக்கியமான நாவல்களில் ஒன்று அருந்ததி ராயின் சின்ன விஷயங்களின் கடவுள். அதுவரையான நாவல்கள் ஆங்கில வாசகனுக்குப் புரிய வேண்டும் என்ற நோக்கத்திலும் அவன் ரசிப்பதற்கான இந்திய சுவாரசியங்களைப் பரிமாறும் எண்ணத்திலும் எழுதப்பட்டவை. அவனுக்கு இசைவான மொழியில் எழுதப்பட்டவை. இந்தப் பொது மரபைச் சின்ன விஷயங்களின் கடவுள் மீறியது.

இது எழுதப்பட்டிருக்கும் மொழி ஆங்கிலம். ஆனால் ஆங்கிலத்தைப் பேசுபவனின் கறாரான ஆங்கிலமல்ல. இந்திய மனத்திலிருந்து வெளியாகும் ஆங்கிலம். கச்சாவான, துள்ளலான ஆங்கிலம். நமக்கு அந்நியமான ஒரு மொழியில் நம்முடைய கதையைச் சொல்ல முடிந்திருப்பது தான் இந்த நாவலின் பங்களிப்பு. கோட்டயத்துக்கு என்றோ வங்காளத்துக்கு என்றோ தனிப்பட்ட ஆங்கிலம் இருக்குமானால் அந்த மொழியின் இசைத்தன்மை இந்த நாவலில் இருப்பதுபோல இருந்திருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன். நாவலில் இடம்பெறும் விநோதமான சொற்கள், ஓசைகள், வாக்கிய அமைப்புகள், குதர்க்கமான வெளிப்பாடுகளை வெறும் ஆங்கில மொழியறிவுமூலம் கொண்டுவருவது கடினம். இந்தியச் சிறு நகர வாழ்க்கையின் துடிப்புகளை, கலாச்சாரப் பின்புலத்தை, மனித இயல்பை உணர்ந்த பின்னணியிலிருந்தே அதைச் செய்ய முடியும். அதை இந்த நாவலாசிரியர் செய்திருக்கிறார். இன்று இந்திய இலக்கியத்துக்கு உலகளாவிய கவனம் ஏற்படுவதற்கான வழிகளை இந்த நாவல்தான் திறந்துவைத்தது என்பது முக்கியமானது. ஊடகங்கள் உருவாக்கிய பரபரப்பு, விமர்சகர்கள் நடத்திய சர்ச்சைகள் எல்லாவற்றையும் மீறி இந்தப் படைப்பு நிற்பது அது மொழியில் நிகழ்த்தியிருக்கும் சாகசத்தினால் என்று படுகிறது.

கதையாடலிலும் ஆங்கில வாசக ஈர்ப்புக்கு மாறான பிராந்தியக் கதை சொல்லும் முறைதான் கையாளப்பட்டிருக்கிறது. இந்தியனல்லாத வாசகனுக்கு இந்தக் கதையாடல் புதிய உலகத்தைத் திறந்துவிடுகிறது. இந்திய வாசகனுக்குத் தெரிந்த கதையைக் காட்டுகிறது. தனது கதையை மீண்டும் தெரிந்துகொள்ள அதை வாசிக்கிறான். இந்த நாவலிலேயே இந்த நுட்பத்தைப் பற்றிச் சொல்கிறார் அருந்ததி ராய். கதகளிக் கலைஞனைப் பற்றிய ‘கொச்சு தொம்பன்’ என்ற அத்தியாயத்தில். அரங்கில் நடத்தப்படவிருக்கும் கதை கர்ணபாரம். கர்ணனின் கதை. கதகளியைப் பார்க்க வரும் எல்லாப் பார்வையாளர்களுக்கும் தெரிந்த கதை. இருந்தும் அது அவர்களை ஏன் ஈர்க்கிறது?

‘கதை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டிருந்தது ஒரு பொருட்டல்ல. ஏனென்றால் வெகுகாலத்துக்கு முன்பாகவே மகத்தான கதைகளின் ரகசியத்தைக் கதகளி கண்டுகொண்டிருந்தது. அவற்றுக்கு எந்த ரகசியமும் கிடையாது என்று. மகத்தான கதைகள் என்பவை நீங்கள் கேட்ட, மீண்டும் கேட்க விழையும் கதைகளே. எந்த இடத்திலும் நீங்கள் உள்ளே நுழைந்து சௌகரியமாகப் பொருத்திக்கொள்ள இடமளிப்பவை. அவை உங்களைக் கிளர்ச்சியூட்டுவதாலும் தந்திரமான முடிவுகளாலும் எதிர்பாராதவற்றாலும் உங்களை வியப்பில் ஆழ்த்துபவை அல்ல. அவை நீங்கள் வசிக்கும் வீட்டைப்போலப் பரிச்சயமானவை. அல்லது உங்கள் காதலரின் வாசனையைப் போல. அவை எவ்வாறு முடியுமென்று தெரிந்திருந்தாலும் தெரியாததைப் போலக் கேட்கவைப்பவை. சின்ன விஷயங்களின் கடவுளும் இது போன்ற வெளிப்படையான கதை தான். தெரிந்த கதை. தெரியாதைப் போலக் கேட்கச் செய்யும் கதை. அது என்ன சொல்கிறது என்பதில் அல்ல; எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதில்தான் நாவலாக முதன்மை பெறுகிறது. வாசிப்பில் இந்த நுட்பத்தை நாம் புரிந்துகொள்ளும்போது நாவலின் துணைப் பிரதிகள் திறந்துகொள்கின்றன. ஒரே நேரத்தில் கருவுற்ற இரு முட்டைகளிலிருந்து பிறந்த ‘டைஸை கோட்டிக்’ (ஞிவீக்ஷ்ஹ்ரீஷீtவீநீ) இரு கரு இரட்டையர்களான எஸ்தாவும் ராஹேலும் ஒன்பது வயதில் பிரிந்து இருபத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு முப்பத்தியொன்றாம் வயதில் - அத்தனை இளமையுமல்ல, அத்தனை முதுமையுமல்ல; ஆனால் வாழவும் சாகவும்கூடிய வயதில் - மீண்டும் சந்திக்கிறார்கள். பிரிவுக்கும் சந்திப்புக்கும் இடையிலான காலங்களிலும் அதற்கு முன்பும் நடந்த சம்பவங்கள்தான் இந்த நாவலின் ஒற்றை வரிக் கதை. ஆனால் அந்தக் காலங்களில் அய்மனம் கிராமத்திலும் இரட்டையர்களின் உறவினர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் ஏற்படும் சம்பவங்கள். அதற்கு முகாந்திரமாக இருக்கும் உறவுகள், அந்த உறவுகளை நிர்ணயிக்கும் உயிரியல் உணர்வுகள், பொருளாதார நிர்ப்பந்தங்கள், கலாச்சார அம்சங்கள், சமூக நடைமுறைகள் என்று மொத்த மனித இருப்பைப் பற்றியவை இந்தத் துணைப் பிரதிகள். இவைதாம் நாவலை ‘இனி ஒரு போதும் சொல்ல முடியாத தனிக் கதை’ ஆக்குகின்றன. சின்ன மனிதர்களின் சின்ன விஷயங்கள். அவைதாம் சரித்திரம் என்பதே இதன் சாரம். ஏராளமான மனிதர்கள் இடம்பெறும் நாவலின் உலகில் பறவைகளும் விலங்குகளும் சிறு பிராணிகளும் இருக்கின்றன. இயற்கை இருக்கிறது. அவையும் சேர்ந்ததுதான் உலகம். ஆனால் அந்த உலகில் மனிதர்களின் அன்பு ஏன் புரிந்துகொள்ளப்பட முடியாததாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது என்பதுதான் நாவல் முன்னிறுத்தும் கேள்வி.

இந்திய நாவல்களில் அதிகம் கொண்டாடப்பட்டதும் தூற்றப்பட்டதுமான சில நாவல்களில் இதுவும் ஒன்று. சல்மான் ரஷ்டி நினைவுக்கு வருகிறார். ஆனால் அவரது எழுத்துக்கள் மத அரசியல் காரணமாகச் சர்ச்சைக்கு உள்ளானவை. சின்ன விஷயங்களின் கடவுள் என்ற எளிய சிக்கலான கதை வெவ்வேறு தரப்பினரால் வெவ்வேறு காரணங்களுக்காக விமர்சிக்கப்பட்டது. இந்தியப் பண்பாட்டையும் மரபையும் இழிவாகச் சித்தரிக்கிறது என்பது ஒரு குற்றச்சாட்டு. யோசித்துப் பார்த்தால் எல்லாப் பண்பாடுகளையும் மரபையும்போல இந்தியப் பண்பாடும் மரபும் முக்கியமானவைதாம்.

ஆனால் அவை இன்றைய வாழ்க்கையில் என்னவாக இருக்கின்றன என்பதைத்தான் நாவல் சித்தரிக்கப் பார்க்கிறது. அருந்ததி ராய் சொன்னதும் நினைவுக்குவருகிறது. ‘இலக்கியம் வாழ்க்கையின் பகுதி. நான் எழுதியிருப்பது இலக்கியம். சுற்றுலாத் துறைக்கான கையேடு அல்ல.’ நாவல் ஒழுக்க நெறிகளுக்கு முரணானது என்பது அடுத்த குற்றச்சாட்டு. அதை முன்வைத்து நாவலாசிரியர்மீது வழக்கும் தொடுக்கப்பட்டது. அருந்ததி ராய் சார்ந்த சிரியன் கிறித்தவப் பிரிவிலிருந்தும் கிறித்தவ மதத்தவர்களிடமிருந்தும் இந்தக் குற்றச்சாட்டு வந்தது. நாவலில் பல இடங்களிலும் கிறித்தவப் பாதிரியார்கள் கேலிக்குரியவர்களாகவே சித்திரிக்கப்படுகிறார்கள். அதிகப்படியான சுதந்திரமளிக்கும் மதமான கிறித்தவம் அடக்குமுறையானது என்று சித்திரிக்கப்படுகிறது. நாவலில் வரும் வெளுத்தா என்ற பாத்திரம் யேசு கிறிஸ்துவுடன் தொடர்புபடுத்திச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது என்பது இந்தக் குற்றச்சாட்டுகளின் உச்சம். ஃபாதர் லாரன்ஸ் சுந்தரம் என்ற பாதிரியார் இந்த விமர்சனங்களை உள்ளடக்கி ஒரு கட்டுரையே எழுதினார். இடதுசாரிகளிடமிருந்தும் நாவலுக்கு எதிரான விமர்சனங்கள் வந்தன. கம்யூனிசத்தைக் கொச்சைப்படுத்துகிறது, மார்க்சியரான இ. எம். எஸ்ஸை அவதூறு செய்கிறது என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது. விமர்சனங்கள் எழுதப்பட்டன. சில விமர்சனங்களைத் தோழர் இ. எம். எஸ்ஸே எழுதினார். முத்தாய்ப்பாக அவர் எழுதிய விமர்சனம் அதுவரை எழுதப்பட்ட எல்லா விமர்சனங்களையும் பலவீனமாக்கியது. ‘அருந்ததி ராயின் நாவல் முறையற்ற பாலியலுக்கு வக்காலத்து வாங்குகிறது’ என்பது அவரது கண்டுபிடிப்பாக இருந்தது. இன்றும் நான் பெரும் மரியாதை வைத்திருக்கும் தலைவரான இ. எம். எஸ். அப்படிச் சொன்னது தீராத வருத்தத்தைக் கொடுத்தது.

தமிழ்ச் சூழலிலும் அருந்ததி ராய் அதிகம் பேசப்படும் ஆளுமையாக இருக்கிறார். அவருடைய நாவலுக்காக அல்ல. கட்டுரைகளுக்காகவும் செயல்பாடுகளுக்காகவும். மிக அரிதான சந்தர்ப்பங்களில் சின்ன விஷயங்களின் கடவுளுக்காகவும். அது ஒன்றும் அவ்வளவு இலக்கியத் தரமான சமாச்சாரம் அல்லவே என்ற விதத்தில் பேசப்பட்டிருக்கிறது. அப்படிப் பேசிய யாரும் நாவலைப் பார்த்திருக்கிறார்களே தவிர வாசிக்கவில்லை என்பதைத் துப்பறியாமலேயே கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது. இதைச் சொல்லும்போதே இரண்டு சுவாரசியமான சம்பவங்களும் நினைவுக்கு வருகின்றன. ஒன்று பழசு. இன்னொன்று சென்ற வாரத்தில் நடந்தது. பழைய சம்பவம் அருந்ததி ராயின் நாவல் வெளியான ஆண்டு நடந்தது.

பத்திரிகையாள நண்பர் ஒருவருக்குத் திருமண அன்பளிப்பாக காட் ஆஃப் ஸ்மால் திங்ஸைக் கொடுத்திருந்தேன். நண்பரும் இலக்கிய ஈடுபாடு உள்ளவர். கதைகளும் நாவல்களும் எழுதியிருப்பவர். தொடர்ந்து வாசிப்பவர். அவருடைய திருமணம் முடிந்த பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு கோடம்பாக்கம் நெடுஞ்சாலையிலிருக்கும் ஒரு பழைய புத்தகக் கடையில் புதையல் தேடிக்கொண்டிருந்தேன். எனக்குத் தேவையான புத்தகங்கள் எதுவும் அகப்படவில்லை. வெளியேறத் தயாரானபோது கடைக்காரர் “சார், தோ இது புது புக்கு. ஒணும்னா வாங்கிக்க. நானூறு ரூவா புக். உனுக்குப் பாதி ரேட்டுக்கு தர்றேன்” என்று நீட்டினார். காட் ஆஃப் ஸ்மால் திங்க்ஸ். வாங்கிப் பார்த்தேன். குட்டியை மோப்பம் பிடித்து அடையாளம் கண்டுகொண்ட தாய் நாய்போல அதன் முகப்புப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தேன். ‘திருமண வாழ்த்துகளுடன் ......க்கு’ என்று எழுதி நான் போட்டிருந்த கையெழுத்து மின்னியது.

இதே போன்ற சம்பவத்தை அருந்ததி ராயும் அவரது பிபிசி பேட்டியில் சொல்லியிருந்தார். அதை நீங்கள் இப்போதும் இணையத்தில் கேட்கலாம். நாவல் வெளிவந்து விற்பனை அமோகமாக நடந்துகொண்டிருந்த நேரம். அதிகாரப்பூர்வமான பதிப்புகளுக்குச் சமமாகப் போலிப் பிரதிகளும் விற்பனையாகிக்கொண்டிருந்தன. இந்தப் போலிப் பிரதி விற்பனையாளர்களின் சலுகை மகத்தானதாக இருந்தது. நாவலின் விலை நூறு ரூபாய். அதை வாங்கிப் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தால் ஐம்பது ரூபாய் வாபஸ் தரப்படும். ஆனால் என் சம்பவத்தில் அப்படி நடக்கவில்லை. ‘புதூ புக்கு சார். ஒரே வெல. எர்நூறு ரூவா’ என்ற கறாரான வார்த்தைகளுக்குப் பணிய வேண்டி வந்தது. நண்பரை மறுபடியும் சந்தித்தபோது கேட்டேன். ‘அருந்ததி ராய் நாவல் படிச்சீங்களா?’ ‘இல்ல சார், ஆனா அது நீங்க சொன்ன மாதிரி இலக்கிய தரமால்லாம் இல்லே’ ‘படிக்காம எப்படிச் சொல்றீங்க?’ ‘நம்ம ஃப்ரெண்ட், அதான் சார் இப்ப சிறுகதைத் தொகுப்புப் போட்டானில்ல அவன் படிச்சுட்டுச் சொன்னான். தேறாதுன்னு.’

அந்தத் தேறாத நாவலை யாரையாவது படிக்க வைத்துவிட முடிவு செய்து இன்னொரு நண்பரின் திரு மணப் பரிசாக அளித்தேன். முன் பக்கத்தில் அழகான வாழ்த்து அட்டையை ஒட்டி, அதைப் பிய்த்தால் அந்தப் பக்கமே கிழிந்துவிடும் மாதிரி ஒட்டிப் பரிசளித்தேன். பிறகு தான் தெரிந்தது. நண்பரின் - அவரும் பத்திரிகையாளர்தான் - புத்தக அலமாரியில் முதலாவது ஆங்கிலப் புத்தக வரவே காட் ஆஃப் ஸ்மால் திங்க்ஸ்தான் என்பது. அவரால் ஆங்கில நாளிதழைக்கூடப் படிக்க முடியாது என்பது. அதில் ஒரே ஆறுதல். அவர் மனைவி ஆங்கில மீடியத்தில் படித்தவர். தமிழே படிக்கத் தெரியாதவர். அவர் அந்த நாவலை இந்தப் பதினைந்து ஆண்டுக்காலத்தில் என்றாவது ஒரு நாள் படித்திருப்பார். சென்ற வாரம் இளங்கவிஞரும் பத்திரிகையாளருமான நண்பரிடம் தொலைபேசியில் பேசினேன். அந்தச் சமயத்தில் சின்ன விஷயங்களின் கடவுள் தமிழில் வெளிவரவிருப்பதையொட்டி ஆங்கில நாளிதழில் செய்தியும் வந்திருந்தது.

அதைப் பற்றி இளங்கவிஞர் அவரது நண்பரான இன்னொரு இளங் கவிஞரிடம் குறிப்பிட்டிருக்கிறார். அவரது எதிர்வினையும் சுவாரசியமாக இருந்தது. ‘அது ஒண்ணும் அவ்வளவு பிரமாதமான படைப்பில்லையே?’ ‘நீங்க படிச்சிருக்கீங்களா?’ ‘இல்ல, நம்ம நண்பர் சொன்னார்’

இந்தச் சம்பவங்களிலிருக்கும் நகைச்சுவையை விட்டுவிடலாம். ஆனால் இவற்றில் சாதாரண எதார்த்தம் புலப்படுகிறது. ஆங்கிலத்தில் படிப்பதற்கு நமக்கிடையிலிருக்கும் தயக்கம் அல்லது ஒவ்வாமை. அது நியாயமானது என்றும் நினைக்கிறேன். அந்த விளைவு இந்த நாவலுக்கும் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன். வாசித்துப் பார்க்காமல் சொல்லப்படுகிற கருத்துகளைவிட வாசித்துப் புரிந்துகொண்ட பிறகு சொல்லப்படும் கருத்துகள் - அவை எதிர்மறையானவையாக இருந்தாலும் - இலக்கியச் செயல்பாடுகளுக்கு வலுசேர்க்கும் என்று நம்புகிறேன். அதற்கான வாய்ப்பை இந்த மொழிபெயர்ப்பு அளிக்கிறது.

நண்பர் ஜி. குப்புசாமி இந்த நாவலை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்திருக்கிறார். இன்று நமக்கிருக்கும் மொழிபெயர்ப்பாளர்களில் நம்பகமான மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவர். குப்புசாமி இதுவரை மூன்று முக்கியமான படைப்புகளைத் தமிழாக்கம் செய்திருக்கிறார். துருக்கி எழுத்தாளர் ஓரான் பாமுக்கின் என் பெயர் சிவப்பு, அயர்லாந்து எழுத்தாளர் ஜான் பான்வில்லின் கடல், இப்போது இந்திய எழுத்தாளர் அருந்ததி ராயின் சின்ன விஷயங்களின் கடவுள். உண்மையில் இந்த வரிசையில் அவர் செய்த முதல் மொழிபெயர்ப்பு அருந்ததி ராயின் நாவல் தான். இன்னும் சரியாகச் சொல்வ தென்றால் குப்புசாமியின் முதல் மொழிபெயர்ப்பே அருந்ததி ராயிடமிருந்துதான் தொடங்குகிறது. ராயின் கட்டுரை ஒன்று அவரால் தமிழாக்கம் செய்யப்பட்டுச் சிறு வெளியீடாக வந்தது. அதன் பிறகே அவர் தொடர்ச்சியாக மொழிபெயர்ப்புகளில் ஈடுபட ஆரம்பித்தார். குப்புசாமியின் ஆர்வமான வாசிப்பும் அயராத உழைப்பும் மூலத்துக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்ற முனைப்பும்தான் அவரது மொழிபெயர்ப்பு முயற்சிகளின் பின்னணி. அது இந்த மொழியாக்கத்திலும் இருக்கிறது. அவருக்கு என் வாழ்த்துகள்.

அருந்ததி ராயின் நாவலைத் தமிழில் கொண்டுவரும் முயற்சி கிட்டத்தட்ட ஆங்கில நாவல் வெளி வந்த நாள் முதலாகவே தொடங்கியது. தமிழில் மட்டுமல்ல, அருந்ததி ராயின் தாய்மொழியான மலையாளத்திலும் அதே சமயம் தொடங்கியது. ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன. அந்த மொழிபெயர்ப்புகள் தனக்கு நிறைவளிக்கவில்லை; நாவலுக்கு நியாயம் செய்யவில்லை என்பதால் அருந்ததி ராய் அவற்றுக்கு இசைவு தெரிவிக்கவில்லை. மிக அண்மையில் தான் மலையாள மொழிபெயர்ப்பு - மலையாள நவீன எழுத்தாளர்களில் முக்கியமானவர்களில் ஒருவரான ப்ரியா ஏ. எஸ். செய்திருக்கிறார் - வெளியிடப்பட்டது. முதல் பதிப்பே 25,000 பிரதிகள். 2011இல் வெளிவந்த நூல் இப்போது இரண்டாம் பதிப்புக்குக் காத்திருக்கிறது. ஒரு தகவலாக இதைப் பகிர்ந்து கொள்கிறேன்.

2001ஆம் ஆண்டு நண்பர் அன்னம் கதிர் என் மொழிபெயர்ப்பில் சில புத்தகங்களை வெளியிட்டார். சக்கரியாவின் நாவல் ஒன்று. உலகக் கவிதைகளின் தொகுப்பு ஒன்று. தொடர்ந்து நாங்கள் யோசித்த நூல் அருந்ததி ராயின் தி காட் ஆஃப் ஸ்மால் திங்க்ஸ். அதன் மொழிபெயர்ப்பு உரிமை பெறுவதற்காக அணுகியபோது தெரிந்தது. அது எட்ட முடியாத பணத் தொலைவில் இருக்கிறது என்பது. பின்னர் 2004ஆம் ஆண்டு உயிர்மை பதிப்பகம் வெளியிடத் தயாரானது. மொழிபெயர்ப்பாளர் ஜி. குப்புசாமி. நண்பர் மனுஷ்யபுத்திரன் கேட்டுக்கொண்ட படி நான்தான் அதை வாசித்துத் திருத்தங்கள் செய்தவன்.

மொழியாக்கம் செய்யப்பட்ட பிரதி ஆசிரியருக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என்ற குறிப்புடன் திருப்பியனுப்பப்பட்டது. இதை எப்படியாவது தமிழில் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக மலையாள எழுத்தாளர்களும் நண்பர்களுமான சக்கரியா, சச்சிதானந்தன், இண்டியன் லிட்டரேச்சர் ஆசிரியரும் ஆங்கில எழுத்தாளருமான ஏ. ஜே. தாமஸ் ஆகியோர் மூலம் பேசிப் பார்க்கவும் செய்தேன். ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருந்த காலக்கெடுவுக்குள் மொழிபெயர்ப்புப் பிரதி அருந்ததி ராயை அடையாததுதான் காரணம் என்று உறுதிப்படுத்தினார்கள் நண்பர்கள். உயிர்மை பதிப்பகம் இந்த நாவலை வெளியிட முடியாமல் போனதன் காரணம் இந்தத் தொழில்நுட்பக் குறைபாடு என்றே நினைக்கிறேன். அதுவல்லாமல் சொல்லப்படும் காரணங்களில் உண்மை எது என்பது எனக்குப் புலப்படாத ரகசியம். இந்த ஆண்டு தொடக்கத்தில் அருந்ததி ராயின் கட்டுரைகளின் தொகுப்பு நொறுங்கும் குடியரசு வெளியானது. அதைக் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டது. அதைத் தொடர்ந்து இந்த நாவல் மொழிபெயர்ப்பு வெளிவருகிறது. முன்பிருந்த வடிவம் மீண்டும் செம்மைப்படுத்தப்பட்டும் திருத்தப்பட்டும் பலமுறை, பலர் வாசித்துச் செறிவுபடுத்தப்பட்டும் இந்தப் பிரதி உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நாவலின் தமிழாக்க முயற்சிகளில் ஆரம்பம் முதலே எனக்குச் சின்ன அளவிலான பங்கு இருந்திருக்கிறது. அந்தப் பங்களிப்புக்கு நண்பர்கள் கதிர், மனுஷ்யபுத்திரன், கண்ணன், ஜி. குப்புசாமி ஆகியவர்களே காரணம். பதினைந்து வருடங்களுக்கும் மேலாக ஒரு வாசகனாக, இந்தியா முழுவதும் பேசப்பட்ட ஒரு நாவலை, என்னுடைய மொழியில் வாசிக்கும் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தவன் என்ற முறையில் இந்த நாவலை வெளியிடும் வாய்ப்பு மகிழ்ச்சியளிக்கிறது. இது ஒரு கௌரவம்.

இந்த கௌரவத்துக்காகச் சம்பந்தப்பட்ட எல்லா நண்பர்களுக்கும் நன்றி.

(வெளியீட்டு விழாப் பேச்சின் விரிவாக்கப்பட்ட வடிவம்)